Irrigation Research Station at Poondi

* 199 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any financial assistance is being given to the Irrigation Research Station, Poondi, by the Indian Council of Agricultural Research, New Delhi; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பூண்டி நீரியல் ஆய்வு நிலையத்தில் குழாய் கிணறுகள்/சாதாரண கிணறுகள் பற்றிய பொறியியல் நுணுக்கங்கள் சம்பந்தமான ஆராய்ச்சி நடத்துவதற்கு இந்திய விவசாய ஆய்வுக்குழுவால் ரூ. 3.25 லட்சம் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் இந்திய விவசாய ஆய்வுக்குழுவே ஏற்றுக்கொள்கிறது. 15—11—70 முதல் துவங்கப்பட்டுள்ள இத்திட்டம் 31—12—1974-ல் முடிவடையும்.

Farm Record Book

* 200 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any system of Farm Record Book has been introduced in the State by the Agriculture Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) தஞ்சாவூரில் பண்ணைப் பதிவுக் குறிப்பு முறையை அமுலில் கொண்டுவருவது பற்றிய ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

பேரீச்சை மரங்கள் பயிரிடுதல்

* 201 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் மணற்பாங்கான மண்டபம், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் பேரீச்சை மரங்களை பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

வாழை ஆராய்ச்சிப் பண்ணைகள்

* 202 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது இம்மாநிலத்தில் வாழை பரிசோதனைப் பண்ணைகள் எத்தனை இருக்கின்றன?

(இ) இப்பண்ணையில் வடார்க்காடு மாவட்டத்தில் பயிரிடுவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரகங்கள் எவை, எவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறையிலும், மதுரை மாவட்டத்தில் மங்களம்கொம்பு என்ற இடத்திலும், திருச்சி மாவட்டத்தில் உய்யக்கொண்டான், திருமலைக்கிராமத்திலும், வடஆற்காடு மாவட்டத்தில் வடவிரிஞ்சிபுரத்திலும் ஆராய்ச்சிக்காக நான்கு பரிசோதனை நிலையங்கள் உள்ளன.

(இ) குட்டைப்பச்சை வாழை, பெரிய பஞ்சை வாழை, ரோபஸ்டா, லெகாடன் முதலிய வாழை ரகத்தில், வடஆற்காடு வாழை ஆராய்ச்சிப் பண்ணையில் ஆராய்ச்சிக்காக பயிர் செய்யப்படும். மேலும், மற்ற நவீன புகழ்பெற்ற, வணிக வாழைகளான வாலரி, போயோ, 81-86 ஆகிய ரகங்களை வெளிநாட்டிலிருந்து பெற்று இந்நிலையத்தில் ஆராய்ச்சிக்காக பயிர் செய்யப் படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, வத்தலகுண்டில் இருக்கும் ஆராய்ச்சி நிலையத்தில் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள்? அதற்கு பயன்படும் நிலப்பரப்பு எவ்வளவு? அதை விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவரவர்களே, மங்களம்கொம்பு என்னும் ஊரில் 30 ஏக்கர் பரப்பில் இவ்வுப ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. வத்தலகுண்டில் அல்ல. பழனி அடிவாரத்தில் இருக்கும் மங்களம்கொம்பு என்று சொன்னேன். இவ்வாராய்ச்சி நிலையத்தில் வாழையின் வகைகள், அவற்றின் குணங்கள், சத்துமிக்க மலைவாழை வகைகள் ஆகியவை பற்றி ஆராயப்பட்டுள்ளது. இத்துடன் வாழையின் பொருளாதார முக்கியத்துவம், மண்வளத்தைப் பெருக்க பசுந்தாள் உரங்களை வாழையின் ஊடுபயிராக பயிரிடுதல், மண்ணின் சாந்தன்மையைப் பராமரித்தல், மலை வாழைக்கு ஏற்ற கட்டுக் கோப்பு சாகுபடி முறைகள், வாழையில் தோன்றும் முக்கிய பூச்சி நோய்கள் பற்றியும் ஆராயப்படும்.

எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் என்பதற்கு குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

கல்பாக்கம் அணுமின் நிலையம்

* 203 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் அணுமின் நிலைய மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறதா?

(இ) இல்லை எனில், என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : துணைத் தலைவரவர்களே, அதற்கான கடிதப்போக்குவரத்து மத்திய அரசுடன் நடந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி : துணைத்தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சாரம் இப்போது இல்லாமல், அண்டை மாநிலமான மைசூரிலிருந்து நாம் பெற்று வருகிறோம். மைசூரில் இருக்கும் மின்சாரத்தை மகாராஷ்டிரத்திற்கு கொடுக்கப்போவதாகப் பார்த்தேன். ஆகவே, கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் அணுமின்சாரம் முழுவதையுமே தமிழ்நாட்டிற்குக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தை மாநில அரசு வற்புறுத்துமா?